TAMIL NADU LEGISLATIVE LIBRARY
5 - MAY 1972
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1972 சனவரி 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திருமதி ஜகதம்பாள் வேலாயுதம் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஜெயங்கொண்டான் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ் நாடு சட்டப் பேரவையில் 1962-லிருந்து 1967-ம ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திருமதி ஜகதம்பாள் வேலாயுதம் அவர்கள் 29—1—1972-ம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் சார்பில் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்துவிட்ட அன்னாருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(அவையினர் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Upgrading of dispensaries into hospitals

* 171 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state whethe there is any proposal to upgrade the Arumanai Dispensary in Vilavancode taluk, Kanyakumari district into a Hospital with at least 50 beds?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. என். டென்னிஸ்: அருமனை ஜனத்தொகை நெருக்கம் அதிகமான இடம். வேறு வசதியான மருத்துவ மனை பக்கத்தில் இல்லை. ஆகவே, அங்கிருக்கும் மருந்தகத்தை மருத்துவ மனையாக உயர்த்துவது அவசியம் என்று அரசு கருதி அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: 'டிஸ்பென்ஸரி' என்பது மருந்தகம். 'ஆஸ்பத்திரி' என்பது மருத்துவ மனை. மருத்துவ மனையாக ஆக்குவதற்கு பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். ஆனாலும், அந்த மருந்தகத்தி